**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 711/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | திருமதி. சத்யா |
| Father's Name/Husband Name: | | திரு. சேதுராமன் |
| Village | : | கீழப்பெரம்பலூர் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 32/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.02.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி சேதுராமன் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது கீழப்பெரம்பலூர் கிராமத்தில் வசித்து வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். அ.சா.1 ரம்யா என் கணவரின் அண்ணன் மனைவி ஆவார். ஆஜர் எதிரி என்னுடைய கணவர் ஆவார். இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.06.2025ம் தேதியன்று போலிசார் விசாரணை செய்த போது 20.05.2025ம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது அ.சா.1 வீட்டிலிருந்து எதிரி வெளியே வந்ததாகவும் அப்போது அ.சா.1யை பார்த்து எதிரி உன்னை தொலைத்து கட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டி சத்தம் போட்டு வந்ததாகவும் அப்போது அங்கிருந்த அ.சா.1டம் கேட்ட போது எதிரி தவறான எண்ணத்தில் தன்னை அனுகியதாக என்னிடம் கூறினார் என்று போலிசாரிடம்

வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.